**டிசம்பர் – 18**

# TNPSC துளிகள்

- உலக வடிவமைப்பு அமைப்பானது (WDO - World Design Organization) தனது புதிய உலகளாவியத் திட்டமான 'உலக வடிவமைப்பு முன்மாதிரி' என்ற ஒரு திட்டத்தை கர்நாடகாவில் உள்ள பெங்களூரில் தொடங்க இருக்கின்றது.
  - இது உலகெங்கிலும் உள்ள மிகப்பெரிய நகரங்களில் முழுமையான முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை செயல்படுத்துவதையும் அவற்றை நிலையானதாக மாற்றுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- புதிய மேம்பாட்டு வங்கியானது (New Development Bank - NDB) இந்தியாவின் தேசிய முதலீட்டு மற்றும் உள்கட்டமைப்பு நிதிக்கு (National Investment and Infrastructure Fund - NIIF) 100 மில்லியன் டாலர் மதிப்பிலான நிதியை வழங்கியுள்ளது.
- மத்திய உள்துறை அமைச்சகமானது "ஸ்ட்ராண்ட்ஹூக்" எனப்படும் ஒரு மென்பொருள் வழுவிற்கு ஆண்ட்ராய்டு இயக்க முறைமையானது பாதிப்பிற்கு உள்ளாவது குறித்து மாநிலங்களுக்கு ஒரு எச்சரிக்கையை விடுத்துள்ளது.
  - நாட்டில் இணையவழிக் குற்றங்களை எதிர்த்துப் போராடுவதற்காக 'இந்திய இணைய வழிக் குற்றத் தடுப்பு ஒருங்கிணைப்பு மையம் (Indian Cyber Crime Coordination Centre - I4C)' என்ற ஒரு திட்டத்தை மத்திய உள்துறை அமைச்சகம் உருவாக்கியுள்ளது.
- பார்ச்சூன் 500 என்ற பட்டியலில் இந்தியாவில் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனமானது முதலிடத்தில் உள்ளது. இந்த நிறுவனமானது அரசிற்குச் சொந்தமான இந்தியன் ஆயில் கழகத்தைப் பின்னுக்குத் தள்ளியுள்ளது.
  - பார்ச்சூன் 500 பட்டியல் என்பது உலகில் உள்ள செல்வம் மிக்க நிறுவனங்களின் ஒரு வருடாந்திரத் தரவரிசையாகும்.
- இந்திய - திபெத்திய எல்லைக் காவல் படையானது (Indo-Tibetan Border Police - ITBP) தனது வீரர்களுக்காக ஒரு பிரத்தியேக திருமண இணைய தளத்தைத் தொடங்கியுள்ளது.
  - மத்திய ஆயுதக் காவல் படைகளிடையே (Central Armed Police Forces - CAPF) முதன் முதலில் வீரர்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட மற்றும் நன்கு நிர்வகிக்கப்பட்ட ஒரு திருமண இணையதளம் இதுவேயாகும்.
- புது தில்லியின் கன்னாட் என்ற இடத்தில் புகைக் கோபுரங்களை அமைக்கும் ஒரு சோதனைத் திட்டத்தை விரைவுபடுத்துமாறு மத்திய அரசு மற்றும் தில்லி அரசிற்கு இந்திய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
  - புகைக் கோபுரங்கள் என்பது காற்று சுத்திகரிப்பானாகச் செயல்படுவதற்காக வடிவமைக்கப் பட்டுள்ள ஒரு காற்று சுத்திகரிப்புக் கட்டமைப்பாகும்.

# தேசியச் செய்திகள்

## தாய்ப்பால் வங்கிகள்

- "பொதுச் சுகாதாரத் திட்டங்களில் பாலூட்டுதல் மேலாண்மை மையங்களை நிறுவுவதற்கான தேசிய வழிகாட்டுதல்கள்" என்பதன் கீழ் மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தால் தாய்ப் பால் வங்கிகள் நிறுவப் பட்டுள்ளன.
- அரசு மருத்துவக் கல்லூரிகளில் அல்லது மாவட்டத்தில் உள்ள மருத்துவமனைகளில் தானமாக வழங்கப்படும் தாய்ப் பாலைச் சேகரித்தல், சோதனை செய்தல்,

பதப்படுத்துதல், சேமித்தல் மற்றும் விநியோகித்தல் ஆகிய நோக்கங்களுக்காக இந்த தாய்ப் பால் வங்கிகள் நிறுவப்பட்டுள்ளன.

- இந்தியாவின் முதலாவது தாய்ப்பால் வங்கியானது 1989 ஆம் ஆண்டில் மும்பையில் நிறுவப் பட்டது.

## GIMS அல்லது அரசின் உடனடியாக செய்தி அனுப்புதல் அமைப்பு

- GIMS (Government Instant Messaging System - அரசின் உடனடியாக செய்தி அனுப்புதல் அமைப்பு) என்பது பாதுகாப்பான உள்துறைப் பயன்பாட்டிற்காக கட்செவி மற்றும் டெலிகிராம் போன்ற புகழ்பெற்ற செய்தி அனுப்புதல் தளங்களுக்கு இணையான ஒரு இந்திய அமைப்பாகும்.
- இது தேசியத் தகவல் மையத்தின் (National Informatics Centre - NIC) கேரளப் பிரிவினால் வடிவமைத்து, உருவாக்கப்பட்டுள்ளது.
- இது மத்திய மற்றும் மாநில அரசுத் துறைகள் மற்றும் அமைப்புகளில் உள்ள பணியாளர்களுக்காக அரசின் உள் மற்றும் வெளி அமைப்புத் தகவல் தொடர்புகளுக்காக தொகுக்கப் பட்டுள்ளது.
- கட்செவியைப் போலவே, GIMS ஆனது செய்தி அனுப்புவரிடமிருந்து அதைப் பெறுபவருக்காக ரகசிய (பாதுகாப்பு) குறியாக்கத்தைப் பயன்படுத்துகின்றது.

## நிலையான வளர்ச்சிப் பிரிவு – மத்திய நிலக்கரித் துறை அமைச்சகம்

- சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் நிலையான நிலக்கரிச் சுரங்கத் துறையை மேம்படுத்துவதற்காக மத்திய நிலக்கரித் துறை அமைச்சகமானது “நிலையான வளர்ச்சிப் பிரிவை” (Sustainable Development Cell - SDC) நிறுவ உள்ளது.
- சுரங்கங்களை மூடும் போது எழும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதே இந்தப் பிரிவின் முக்கிய நோக்கமாகும்.
- இந்தப் பிரிவானது நிலையான சுரங்கச் சுற்றுலா, சுரங்க நீர் மேலாண்மை, காற்றின் தரம் மற்றும் நிலையான வேலைப்பளு மேலாண்மை ஆகியவற்றின் மீது கவனம் செலுத்த இருக்கின்றது.
- மேலும் இந்தப் பிரிவானது சுரங்க மூடல் நிதியத்தையும் அமைக்க இருக்கின்றது.

## எஃகு இந்தியா 2019 - CII

- இந்திய தொழில்துறைக் கூட்டமைப்பானது (Confederation of Indian Industry - CII) “எஃகு இந்தியா 2019: முக்கியத் துறைகளில் உலோகத்தின் தீவிரத் தன்மையை ஏற்படுத்துதல்” என்ற ஒரு கருத்தரங்கை ஏற்பாடு செய்தது.
- இந்த நிகழ்வில் எஃகின் நுகர்வு அதிகரிப்பதற்கான உத்திகள் மற்றும் கிராமப் புறங்களில் எஃகின் பயன்பாட்டை ஊக்குவித்தல் ஆகியவை குறித்து விவாதிக்கப் பட்டது.
- இந்தக் கருத்தரங்கானது 2030 ஆம் ஆண்டிற்குள் 300 மெட்ரிக் டன் எஃகு உற்பத்தி இலக்கை (தேசிய எஃகு கொள்கையின்படி) அடைய இந்தியாவிற்கு உதவ இருக்கின்றது.
- இந்த நிகழ்வில் இந்தியாவில் எஃகுப் பயன்பாட்டை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட “இசப்தி இராடா” என்ற ஒரு பிரச்சாரம் பற்றி விவாதிக்கப் பட்டது.
- இந்திய இறகுப் பந்தாட்ட வீரரான பி.வி. சிந்து இந்த இசப்தி இராடாவின் தூதராக

உள்ளார்.

### இந்திய - பசிபிக் கொள்கை விரிவாக்கம்

- இந்தியா தனது இந்திய பசிபிக் கொள்கையை விரிவுபடுத்தத் திட்டமிட்டுள்ளதாக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சரான எஸ். ஜெய்சங்கர் கூட்டு இந்தியப் பெருங்கடல் உரையாடல் என்ற முன்னெடுப்புக் கூட்டத்தில் அறிவித்துள்ளார்.
- இந்த உரையாடலின் சந்திப்பானது புது தில்லியில் நடத்தப் பட்டது.
- இதுவரை, இந்திய - பசிபிக் கொள்கையானது இந்தியப் பெருங்கடலையும் அரேபியக் கடலையும் உள்ளடக்கியுள்ளது.
- தற்பொழுது விரிவாக்கப்படும் புதிய கொள்கையின் படி, இப்பகுதியில் தற்பொழுது வளைகுடா நாடுகள் மற்றும் ஆப்பிரிக்கா ஆகியவையும் அடங்க இருக்கின்றன.

***முக்கியத்துவம்:***

- இந்த விரிவாக்கக் கொள்கையானது இந்தியாவின் கிழக்கு நோக்கிய செயல்பாட்டுப் பார்வை மற்றும் இந்திய - பசிபிக் கொள்கைக்கு உதவ இருக்கின்றது.
- இந்தியாவின் கவனமானது பசிபிக் பெருங்கடல் பிராந்தியத்திற்குப் பதிலாக இந்திய – பசிபிக்கின் இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தின் மீது உள்ளது.
- இந்திய - பசிபிக் பகுதியின் மிக முக்கியமான கட்டுமானப் பகுதியாக ஆசியான் அமைப்பு விளங்குகின்றது.




## சர்வதேசச் செய்திகள்

### ஐக்கிய நாடுகள் காலநிலை உச்சி மாநாடு – நிறைவு

- ஸ்பெயினின் மாட்ரிட்டில் நடத்தப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை தொடர்பான பேச்சுவார்த்தைகள் நிறைவு பெற்றன. ஐக்கிய நாடுகள் சபையின் வரலாற்றில் மிக நீண்ட நாட்கள் நடைபெற்ற பேச்சுவார்த்தை இதுவேயாகும்.
- இந்த மாநாட்டில் கரிமச் சந்தையின் ஒழுங்குமுறைக்குத் தீர்வு காண்பது குறித்து முக்கியமாக விவாதிக்கப்பட்டது.
- கரிமச் சந்தையானது கார்பன் டை ஆக்சைடு உமிழ்வுக்காக அதன் விலைகளை நிர்ணயிக்கின்றது.
- பாரிஸ் ஒப்பந்தத்தை அமல்படுத்துவது தொடர்பான உடன்பாட்டை எட்ட இந்த உச்சி மாநாடு தவறிவிட்டது.


- ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டமானது பின்வரும் அறிக்கைகளை வெளியிட்டுள்ளது:
    - உமிழ்வு இடைவெளி அறிக்கை
        - 2100 ஆம் ஆண்டிற்குள் பூமியின் சராசரி வெப்பநிலையானது 3.2 டிகிரி செல்சியஸ் வரை உயரும் என்று இந்த அறிக்கை எச்சரிக்கின்றது.
    - உலகளாவிய கார்பன் திட்ட (Global Carbon Project - GCP) அறிக்கை
        - 2001 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட GCP ஆனது உலகளாவிய கார்பன் உமிழ்வுகளையும் அவற்றின் காரணங்களையும் அளவிட முயல்கின்றது.
- இந்த உச்சி மாநாட்டின் தலைமைத்துவ நாடான சிலி ஆனது (இந்த உச்சி மாநாடு ஸ்பெயினின் மாட்ரிட்டில் நடைபெற்றது), காலநிலை லட்சியக் கூட்டணியை (Climate Ambition Alliance - CAA) தொடங்கியுள்ளது.
    - 2050 ஆம் ஆண்டிற்குள் கார்பன் உமிழ்வு நிகர சுழியத்தை அடைவதற்கு CAA ஆனது தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகளின் மீது கவனம் செலுத்த இருக்கின்றது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## தேசிய கங்கை ஆணையக் கூட்டம்

- கான்பூரில் உள்ள சந்திர சேகர் ஆசாத் வேளாண் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற தேசிய கங்கை ஆணையத்தின் முதலாவது கூட்டத்திற்குப் பிரதமர் நரேந்திர மோடி தலைமை தாங்கினார்.
- இந்த ஆணையமானது "நமாமி கங்கே" என்ற இலட்சியத் திட்டத்தை ஆய்வு செய்தது.
- தேசிய கங்கை ஆணையமானது கங்கை நதியின் புத்துயிர்ப்பு, பாதுகாப்பு மற்றும் மேலாண்மைக்கான தேசிய ஆணையம் என்றும் அழைக்கப் படுகின்றது.
- இந்த ஆணையமானது சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986ன் கீழ் 2016 ஆம் ஆண்டில் அமைக்கப் பட்டது.
- இது தேசிய கங்கை நதி வடிநில ஆணையத்திற்கு (National River Ganga Basin Authority - NRGBA) பதிலாக அமைக்கப் பட்டுள்ளது.




## கார்பன் சமநிலை கிராமம் – மீனங்காடி

- கேரளாவின் வயநாடு மாவட்டத்தில் உள்ள மீனங்காடி கிராமப் பஞ்சாயத்தானது கார்பன் சமநிலை கிராமமாக மாறுவதற்கு முயற்சி எடுத்துள்ளது.
- இது காடு வளர்ப்புத் திட்டங்கள், நெகிழிக் கழிவுகளை மறுசுழற்சி செய்தல், குறைந்த உமிழ்வு சமையல் அடுப்புகளை வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புச் சட்டத்தின் நிதியில் இருந்து புதிய மரங்களை நடவு செய்வதும் பராமரிப்பதும் இதில் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

## உலகின் பழமையான குகை ஓவியம் – இந்தோனேசியா

- "நேச்சர்" என்ற இதழில் வெளியிடப்பட்ட ஒரு ஆய்வின் படி, இந்தோனேசியாவில் மிகப் பழமையான விலங்கு வரைபடம் ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- இந்தோனேசியாவின் சுலவேசியின் தெற்கே உள்ள லியாங் புலு சிபோங் 4 என்ற சுண்ணாம்புக் குகையில் இந்த ஓவியம் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.
- தொடர் யுரேனியம் பகுப்பாய்வைப் பயன்படுத்தியதன் மூலம் இது கிட்டத்தட்ட 44,000 ஆண்டுகளுக்கு முந்தைய காலத்தைச் சேர்ந்தது என்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.




# மாநிலச் செய்திகள்

## ஆந்திரப் பிரதேசம் - திஷா மசோதா

- ஆந்திரப் பிரதேச திஷா சட்டம், 2019 (ஆந்திரப் பிரதேச மாநில குற்றவியல் சட்டம்

(திருத்தம்) சட்டம், 2019) என்பதனை ஆந்திர மாநில சட்டமன்றம் நிறைவேற்றியுள்ளது.

- இது பாலியல் குற்றத்திற்கான தீர்ப்புக் காலத்தை தற்போதுள்ள 4 மாத காலத்திலிருந்து 21 நாட்களாக குறைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த மசோதாவானது பலாத்காரக் குற்றங்களுக்கு மரண தண்டனை வழங்க வழி வகை செய்கின்றது.
- மேலும் POCSO சட்டம், 2012ன் கீழ் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களுக்கு இது ஆயுள் தண்டனையை வழங்குகின்றது.
- பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளின் விவரங்கள் அடங்கியப் பதிவேட்டைப் பொது மக்களுக்கு அறிமுகப்படுத்திய இந்தியாவின் முதலாவது மாநிலம் ஆந்திரப் பிரதேசமாகும்.

### ராணுவ இலக்கிய விழா - சண்டிகர்

- ராணுவ இலக்கியத் திருவிழாவின் (Military Literature Festival - MLF) மூன்றாவது பதிப்பானது சண்டிகர் ஒன்றியப் பிரதேசத்தின் லேக் சங்கத்தில் நடத்தப் பட்டது.
- இந்தத் திருவிழாவானது பாதுகாப்புப் பிரச்சினைகள் குறித்த தகவல்களைப் பற்றி விவாதிப்பதற்காக போர்க்களங்கள் மற்றும் இலக்கியத் துறைகளைச் சேர்ந்த மிகச் சிறந்த மனிதர்களை ஒன்றிணைக்க இருக்கின்றது.




## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### சர்வதேசப் புவியியல் மாநாடு

- 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 36வது சர்வதேசப் புவியியல் மாநாட்டை (International Geological Congress - IGC) நடத்த இந்தியா தயாராகி வருகின்றது.
- இந்த மாநாட்டின் கருத்துரு, 'புவி அறிவியல்: ஒரு நீடித்த வளர்ச்சிக்கான அடிப்படை அறிவியல்' என்பதாகும்.
- இந்த நிகழ்வை இரண்டு முறை நடத்திய ஒரே ஆசிய நாடு இந்தியா மட்டுமேயாகும்.
- 1964 ஆம் ஆண்டில், இந்தியா முதன்முறையாக இந்த மாநாட்டை நடத்தியது.
- இந்த நிகழ்வை ஏற்பாடு செய்வதற்கான தலைமை நிறுவனம் இந்தியப் புவியியல் ஆய்வு மையமாகும்.

*சர்வதேச புவியியல் மாநாடு பற்றி*

- இது புவிசார் அறிவியல் ஒலிம்பிக் என்று பிரபலமாக விவரிக்கப் படுகின்றது.

- இது நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் உலகளாவிய புவி அறிவியல் மாநாடாகும். மேலும் இந்த மாநாட்டில் உலகம் முழுவதிலுமிருந்து சுமார் 5000-6000 புவியியலாளர்கள் கலந்து கொள்கின்றனர்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★